# நான் மணிகள்

0302
4B05

கி.ஆ.பெ.விசுவநாதம்

# நான்மணிகள்

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி
டாக்டர். கி. ஆ. பெ. விசுவநாதம் டி. லிட்.

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 1960 |
| இரண்டாம் பதிப்பு | : | 1962 |
| மூன்றாம் பதிப்பு | : | 1967 |
| நான்காம் பதிப்பு | : | 1973 |
| ஐந்தாம் பதிப்பு | : | 1980 |
| ஆறாம் பதிப்பு | : | 1988 |

விலை ரூ. 4-00

அச்சிட்டோர் :

சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-86 [128]

# பதிப்புரை

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஒழுக்கத்தையும் கடமை உணர்ச்சியையும் உயிரெனஓம்புபவர்கள். ஒழுக்கக் குறை கண்டபோது அவர்கள் எவ்வாறு துடிதுடித்து விடுவார்கள் என்பது அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும். அவர்கள் தாம் கண்டவற்றை மக்களுக்கு உணர்த்தி நல்வழிப்படுத்த ''அறிவுக்கு உணவு'' போன்ற நூல்களை எழுதி இருப்பதுடன், பண்டைய பெரும் புலவர்களது இலக்கிய நூல்களையும் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப உரை நடையில் எழுதி வருகிறார்கள். இந்த வகையைச் சேர்ந்தது முன்னர் வெளிவந்த ''மும்மணிகள்'' என்ற நூலும் இந்த ''நான்மணிகள்'' என்ற நூலும். இனி இதைத் தொடர்ந்து ஐந்து மணிகள், மூதுரை முத்து, நல்வழிச்சாறு முதலியனவும் வரவிருக்கின்றன.

கி. ஆ. பெ. அவர்களின் நடை அழகிலும் சொல்லாராய்ச்சியிலும் கருத்துச் செறிவிலும் உள்ளத்தைப் பறிகொடுத்து, அவர்களின் புதிய நூல்களைக் காணத் துடித்து நிற்கும் தமிழ் மக்களுக்கு நாங்கள் வழங்கும் பொங்கல் பரிசு நான்கு மணிகள். தமது அறிவுப் படையல்களை அள்ளி வழங்க ஏற்ற கலமாக எங்களை ஏற்றுக் கொண்ட முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும்.

சென்னை.
14-1-'60

தங்களன்பிற்குரிய,
பாரி நிலையத்தினர்

# நான்மணிக்கடிகை!

தமிழ் வளர்த்து மறைந்த தமிழ்ச் சங்கங்கள் மூன்று. அவை முறையே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் எனப்பெறும். இவற்றுள் முதற்சங்க இடைச்சங்க காலத்தைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை, கடைச் சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனலாம்.

கடைச்சங்க காலத்தில் இருந்த தமிழ் நூல்கள் 36. இவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்ற முப்பிரிவை உடையன. 10-ம், 8-ம் மேல் கணக்கு நூல்கள். அவை பெரும்பாலும் காதலை, வீரத்தை, கொடையைக் குறிப்பன. அடுத்த பதினெட்டும் கீழ்க்கணக்கு நூல்கள். இவை யாவும் அறத்தை, பொருளை, இன்பத்தைக் குறித்து மக்களுடைய ஒழுக்கத்தை நிலைநிறுத்தத் தோன்றியவை. இப் பதினெட்டு நூல்களும்,

| | | | |
|---|---|---|---|
| 1. | நாலடியார் | 10. | திணைமாலை நூற்றைம்பது |
| 2. | நான்மணிக்கடிகை | 11. | திருக்குறள் |
| 3 | இன்னா நாற்பது | 12. | திரிகடுகம் |
| 4. | இனியவை நாற்பது | 13. | ஆசாரக் கோவை |
| 5 | கார் நாற்பது | 14. | பழமொழி |
| 6. | களவழி நாற்பது | 15. | சிறுபஞ்சமூலம் |
| 7. | ஐந்திணை ஐம்பது | 16. | கைந்நிலை |
| 8. | திணைமொழி ஐம்பது | 17. | முதுமொழிக்காஞ்சி |
| 9. | ஐந்திணை எழுபது | 18. | ஏலாதி |

எனப் பெயர் பெறும்.

இவற்றுள் நான்மணிக்கடிகை இரண்டாவது நூலாகும். இதனைச் செய்தவர் ஆசிரியர் **விளம்பி நாகனார்**. விளம்பி என்பது ஆசிரியரின் ஊராய் இருத்தல் வேண்டும். இந்நூல் தோன்றி ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் ஆயின. ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு நீதிகளைக் கூறுவதால் இது நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

# நான்மணிகள்

நான்மணிகள் என்பது நான்மணிக்கடிகை என்ற நூலின் மறுபிறவி. இதற்கு முன் என்னால் வெளியிடப் பட்ட மும்மணிகள், திரிகடுகம் என்ற நூலின் மறு பிறவி யாகும். அது இப்போது ஐந்தாம் பதிப்பாக வெளிவருகிறது. செலவான நூல்கள் 12000. அத்துறையில் இப்பணி இரண் டாவது பணி. மூன்றாவது பணி சிறுபஞ்சமூலம். அது ஐம் மணிகள் எனப் பெயர் பெற்று வெளிவரும்.

இந்நூல் கவிதையாக இருந்தமையால் புலவர்களால் மட்டுமே சுவைக்கக்கூடியதாய் இருந்து வந்தது. அதை எளிய நடையில் எழுதிப் பொதுமக்கள் அனைவரும் சுவைத்துப் பயனடைய வேண்டும் என்பதே இப்பணியின் நோக்கம்.

நேருக்கு நேராகப் பதவுரை பொழிப்புரை இன்றிக் கருத்துரையாகவே எழுதப்பெறுகிறது. பெரும்பான்மை யான கருத்துக்கள் நான்மணிக்கடிகையைத் தழுவியதாகவே இருக்கும். காலத்திற்கு ஏற்ப வேண்டாத சில விடப் பெற்றும் வேண்டிய சில வருவிக்கப் பெற்றுமிருக்கும்.

பழந்தமிழ் மக்களின் அன்பை, அறத்தை, பண்பை, வாழ்வை நன்கறிய இந்நூல் பெருந் துணை செய்யும்.

ஒழுக்கம் என்பதே இன்னது என அறியாது தவறான வழியில் நெறி தவறி நடக்கும் பெரும்பான்மையான இன்றைய தமிழ் மக்களுக்கு—குறிப்பாக இளைஞர்களுக்கு இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்குமென நம்ப லாம்.

சிறந்த குறிக்கோளை முன் வைத்து வெளிவருகின்ற இந்நூலின் சிறு பிழைகளைப் பொருட்படுத்த வேண்டாம் எனத் தமிழகத்தின் புலவர் பெருமக்களை வணங்கி வேண்டு கிறேன்.

திருச்சிராப்பள்ளி
1—9—1960

தங்களன்பிற்குரிய,
**கி. ஆ. பெ. விசுவநாதம்**

எளியவர் என்று எவரையும் இகழாதே; தகுதியற்றவரிடமிருந்து எதையும் வாங்காதே; தவறு கண்டாலும் ஏழை மக்களைச் சீறாதே; தீய சொற்களைப் பதை பதைத்த போதும் கூறாதே. (1)

பறை ஓசையைக் கேட்டால் அசுணமா உயிர் வாழாது; தமது நிலை குலைந்தால் அறிவுடையோர் உயிர் வாழார்; நெல் உண்டாகி விட்டால், மூங்கில் பட்டுப் போய்விடும்; இழிவுரைகளைக் கேட்டால் சான்றோர் உயிர் நீத்து விடுவர். (2)

மாணிக்கங்களின் இயல்பைக் கழுவி அறியவேண்டும்; குதிரைகளின் இயல்பை ஏறி அறிய வேண்டும்; பொன்னின் இயல்பைச் சுட்டு அறிய வேண்டும்; உறவினர் இயல்பைக் கெட்டு அறிய வேண்டும். (3)

அகில் கள்ளியின் வயிற்றிற் பிறக்கும்; அரிதாரம் மானின் வயிற்றிற் பிறக்கும்; முத்து கடலின் அடியிற் பிறக்கும்; நன்மக்கள் பிறக்குங் குடியை எவரறிவார்? (4)

மலையின் பாறைகளில் மாணிக்கம் பிறக்கும்; காதலியின் சொற்களில் களிப்பு பிறக்கும்; அருள் நிறைந்தால் அறநெறி பிறக்கும்; பொருள் நிறைந்தால் எல்லாம் பிறந்துவிடும். (5)

எள்ளற்க என்றும் எளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. (1)

பறைபட வாழா வசுணமா, உள்ளம்
குறைபட வாழார் உரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம், தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு. (2)

மண்ணி யறிப மணிநலம், பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநலம்—மாசறச்
சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் கெட்டறிப
கேளிரான் ஆய பயன். (3)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்—பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும், அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. (4)

கல்விற் பிறக்குங் கதிர்மணி, காதலி
சொல்லிற் பிறக்கும் முயர்மதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி, எல்லாம்
பொருளிற் பிறந்து விடும், (5)

நல்லொழுக்கம் சிறந்த செல்வத்தை ஒக்கும்; முறை யான இல்லறம் துறவறத்தை ஒக்கும்; நட்பினரைப் புறங் கூறல் கொலை செய்வதை ஒக்கும்; மதியாதார் மனை செல்லல் பேரிழிவை ஒக்கும். (6)

கள்ள மனம் கொண்டவர்க்கும் தூக்கம் இல்லை; காதல் உளம் கொண்டவரும் துயில்தல் இல்லை; ஒண் பொருளைச் சேர்ப்பவரும் உறங்கல் இல்லை; ஊர் காக்கும் மக்களுக்கோ உறக்கம் இல்லை. (7)

கடந்த காலத் துன்பம் கற்றவரின்முன் தோன்றாது. உழைப்பின் துன்பம் ஊக்கத்தின்முன் தோன்றாது; தீமை யைச் செய்பவர்முன் அறம் தோன்றாது; சினத்தை அடை பவர்முன் நலம் தோன்றாது. (8)

நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும்; குளத்திற்கு அழகு தாமரை மலர்கள்; பெண்மைக்கு அழகு நாணம் உடைமை; ஆண்மைக்கு அழகு அறத்தைக் காத்தல். (9)

யானையைக் கட்டுத்தறியினால் வயப்படுத்துவர்; நல்ல பாம்பை மகுடியினால் வயப்படுத்துவர்; கீழ்மக்களைக் கண்டிப்பினால் வயப்படுத்துவர்; சான்றோரை இன்சொல் லால் வயப்படுத்துவர். (10)

திருவொக்கும் தீதில் ஒழுக்கம், பெரிய
அறனொக்கும் ஆற்றின் ஒழுகல்—பிறனைக்
கொலையொக்கும் கொண்டுகண் மாறல், புலை
[யொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு. (6)

கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை—ஒண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில். (7)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம், காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா உறாமுதல்—தெறாரென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா, எல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும். (8)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை—பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் லுலகத் தறம். (9)

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல். (10)

நினையாமல் இருக்க வேண்டும் பிறர் செய்த தீமை களை; மறவாமல் இருக்க வேண்டும் அவர் செய்த நன்மை களை; எப்போதும் விடவேண்டும் எளிதில் வரும் கோபத்தை; அழித்து விடவேண்டும் ஆக்கம் சிதைப்பதை.

பல்லினால் நோய் செய்யும் பாம்பு; கொம்பினால் நோய் செய்யும் காளை; ஊடலால் நோய் செய்வர் பெண் கள்; உள்ளத்தால் நோய் செய்வர் பெரியோர். (12)

பண்ணமையாத யாழைவிட பறையோசை நல்லது; ஆண்மையற்ற ஆணைவிட அடக்கமுடைய பெண் நல்லது; ஊசிப்போனதை உண்பதைவிட பசித்திருப்பது நல்லது; உரியவரைவிட்டு விலகி வாழ்வதைவிட உயிர் விடுதல் நல்லது. (13)

ஈகை விளைவது செல்வப் பயிரில்; மகிழ்ச்சி விளைவது இன்சொல் பாத்தியில்; துன்பம் விளைவது ஈரமில்லா நிலத்தில்; இரத்தல் விளைவது வறுமைச் செடியில். (14)

இழிவாக மதிக்கப்பட வேண்டுமானால் பிச்சை எடு; என்றும் நிலைத்திருக்க வேண்டுமானால், புகழை நடு; தன் னோடு செல்வது வேண்டுமானால், கொடை கொடு; எப் போதும் வெல்வது வேண்டுமானால் சினத்தை விடு. (15)

கன்றாமை வேண்டும் கடிய, பிறர்செய்த
நன்றியை நன்றாகக் கொளல் வேண்டும—என்றும்
விடல்வேண்டும் தங்கள் வெகுளி, அடல் வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. (11)

பல்லினான் நோய்செய்யும் பாம்பெலாங் கொல்லேறு
கோட்டான் நோய்செய்யுங் குறித்தாரை—ஊடி
முகத்தான் நோய்செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் தருகுவர் நோய். (12)

பறைநன்று பண்ணமையா யாழின் நிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலில் நன்று பசித்தல் பசைந்தாரின்
தீர்தலிற் தீப்புகுதல் நன்று. (13)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியுள் இனிதெழூஉம்—வன்சொல்
சரவெழூஉங் கண்ணில் குழியுள் இரவெழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து. (14)

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (15)

நீர்க் கடலைக் கடப்பர் மாலுமிகள்; படைக் கடலைக் கடப்பர் மறவர்கள்; தவக் கடலைக் கடப்பர் நெறிநிற் போர்; அவைக் கடலைக் கடப்பர் கற்றறிந்தோர். (16)

மூப்பு மிகுந்தால் அழகு கெடும்; மீறிய செயல்களால் செல்வம் கெடும்; பிணி மிகுந்தால் உயிர் கெடும்; பொய் மிகுந்தால் நட்புக் கெடும். (17)

மனைக்கு ஆக்கம் மாண்புடைய மனைவி; படைக்கு ஆக்கம் பயிற்சி பெற்ற வீரன்; நாட்டுக்கு ஆக்கம் நல்ல தோர் மன்னன்; கேட்டுக்கு ஆக்கம் உறவினரை விரட்டல். (18)

கணவன் கலங்கினால் மனைவி கலங்குவாள்; கற்றவன் கலங்கினால் கருத்துகள் கலங்கும்; குடிமக்கள் கலங்கினால் கொற்றவன் கலங்குவான்; பண் கலங்கினால் பாடல் கலங்கிவிடும். (19)

மனை பாழாவது மனைவி இல்லாமல்; இடம் பாழாவது நண்பர்கள் இல்லாமல்; சபை பாழாவது பெரியோர் இல்லாமல்; உடம்பு பாழாவது அறிவு இல்லாமல். (20)

கடற்குட்டம் போல்வர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந்— தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்தும் அவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும். (16)

பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
முத்த லிறுவாய்த் தினைநலந் தூக்கில்
மிகுதி யிறுவாய செல்வங்கள் தத்தம்
தகுதி யிறுவாய்த் துயிர். (17)

மனைக்காக்க மாண்ட மகளிர் ஒருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கம்
கேளிர் ஒரீஇ விடல். (18)

பெற்றான் அதிர்ப்பிற் பிணையன்னா ளதிர்க்கும்
கற்றான் அதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும்
பாட லதிர்ந்து விடும். [பண்ணதிர்ப்பின் (19)

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை, தான்செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. (20)

ஒற்றுமை இல்லாமை வலிமையைக் கெடுக்கும்; தீய ஒழுக்கம் உடம்பைக் கெடுக்கும்; பொருந்தாப் பாண்டம் பாலைக் கெடுக்கும்; கூடா நட்பு குடியைக் கெடுக் கும். (21)

என்றும் பொய்யாமை புகழை உண்டாக்கும்; இகழும் அறியாமை தீமையை உண்டாக்கும்; சிறிதும் கல்லாமை பேதமையை உண்டாக்கும்; சிறந்த அறிவு ஒளியை உண்டாக்கும். (22)

பாகன் வருத்தினாலும் யானை சுமந்து செல்லும்; தாய் அடித்தாலும் பிள்ளை தழுவ வரும்; தவறு செய்தாலும் நண்பர் பொறுப்பர்; நல்லது செய்தாலும் பகைவர் ஒட்டார். (23)

நகைநலம் நண்பர்களால் சிறப்படையும்; அவைநலம் அறிஞர்களால் சிறப்புப் பெறும்; தேர்நலம் பாகனாற் பெருமை பெறும்; ஊர்நலம் உள்ளோரால் மதிக்கப் பெறும். (24)

அஞ்ச வேண்டியவைகளை அஞ்சாது இருக்காதே; உதவி செய்வதில் ஒருபோதும் குறையாதே, நீதி வழங்கு வதில் ஒருபக்கம் சாயாதே; நேர்மையாளர் செயல்களில் ஐயப்பாடு கொள்ளாதே. (25)

மொய்சிதைக்கும் ஒற்றுமையின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின். (21)

புகழ்செய்யும் பொய்யா விளக்கம் இகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை—காணாக்
குருடனாச் செய்வது மம்மர் இருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு. (22)

மலைப்பினும் வாரணந் தாங்கும் அலைப்பினும்
அன்னேயென் றோடுங் குழவி—சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்வார் ஒட்டார்
உடனுறையுங் காலமு மில். (23)

நகைநல நட்டார்கண் ணந்தும் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்—விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்தும் ஊர்நலம்
உள்ளானால் உள்ளப் படும். (24)

அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் தனக்கொத்த
எஞ்சாமை எஞ்சல் அளவெல்லாம்—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினும் நாடாதி
நாட்டார்கண் விட்ட வினை. (25)

கொல்வதற்கென்று உயிர்களை வளர்ப்பதும் குற்றம்; கொல்லப்பட்டவைகளை வாங்கி உண்பதும் குற்றம்; உயிர்களைக் கொல்லும்படி சொல்வதும் குற்றம்; அவ்வாறின்றித் தாமே கொல்லுவதும் குற்றம். (26)

மன்னனின் ஆட்சியைக் கண்டு மகிழ்வர் குடிகள், தாயின் பாலைக் கண்டு மகிழும் குழந்தைகள்; வானத்து மழையைக் கண்டு மகிழும் உயிர்கள்; மக்களின் சாவைக் கண்டு மகிழ்வான் நமன். (27)

அறிவு நூல்களைக் கற்பவன் அறியாமையிலிருந்து விலகுவான்; அறியாமையிலிருந்து விலகியவன் அறிவுடைமை பெறுவான்; அறிவுடைமை பெற்றவன் நன்னெறியிற் நிற்பான்; நன்னெறியில் நிற்பவன் நற்பேறு பெறுவான். (28)

பள்ளமுள்ளவிடத்து நீர் நிலைத்து நிற்கும்; பழிக்கஞ்சாரிடத்துப் பாவம் சென்று நிற்கும்; தீ நெறியாரிடத்து ஆசை வளர்ந்து நிற்கும்; அருளுடையாரிடத்து அறிவு துணை நிற்கும். (29)

செல்வத்தைப்போல வலிமையுடையது வேறில்லை; கல்வியைப்போலத் துணையாவது வேறில்லை; வறுமையைப்போலத் துன்பமானது வேறில்லை; ஈகையைப் போலச் சிறப்பானது வேறில்லை. (30)

அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம். (26)

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழும் உலகம், உலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று. (27)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும்—கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பா லுலகின் இசைநிறீஇ—யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும். (28)

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்—அழித்துச்
செறுவழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு. (29)

திருவிற் றிறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லை யில்என்னாத
வன்மையின் வன்பாட தில். (30)

புகையைக் கண்டால் நெருப்பு இருப்பது தோன்றும்; முகமலர்ச்சியைக் கண்டால் மன மகிழ்ச்சி தோன்றும்; வஞ்சகச் செயல்களால் உளப் பகைமை தோன்றும்; பகைமை முற்றினால் துன்பங்கள் தோன்றும். (31)

வருவது அறியாப் பெண்கள் நோய்க்கு ஒப்பாவர்; அன்பு நிறைந்த மக்கள் அணிகலனுக்கு ஒப்பாவர்; அறிவு இல்லாத ஆண்கள் புல்லுக்கு ஒப்பாவர்; வலிமையுடைய நெஞ்சினர் கல்லுக்கு ஒப்பாவர். (32)

அருளுள்ளம் கொள்வதைவிட நற்பிறப்பு வேறில்லை; பெற்று வளர்த்த தாயைவிட உறவினர் வேறில்லை; தவம் நிறைந்த வாழ்வைவிடச் சிறந்த அழகு வேறில்லை; இளமை நிறைந்த வாழ்வைவிட இன்பமானது வேறில்லை.

இரும்புக் கம்பிகளை இரும்பினாலேயே வெட்டுவர்; நீர் குடிப்பவர் நீரினாலேயே வாய் கழுவுவர்; அருஞ் செயல்களை அரியவர்களைக் கொண்டே செய்வர்; பெருஞ் செயல்களைப் பெரியவர்களைக்கொண்டே முடிப்பர். (34)

வீரக் களிப்பு மறவர்க்குப் போர்க்களத்தில் தோன்றும்; ஈகைக் களிப்பு புரவலர்க்கு ஈயும்பொழுது தோன்றும்; வியப்புக் களிப்பு ஒன்றை உணரும்பொழுது தோன்றும்; கீழ்மைக் களிப்பு பிறரிடம் பிதற்றும்பொழுது தோன்றும்.

புகைவித்தாப் பொங்கழல் தோன்றுஞ் சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை—பகையொருவன்
முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும். (31)

பிணியன்னர் பின்னோக்காப் பெண்டிர் உலகிற்
கணியன்னர் அன்புடை மாக்கள்—பிணிபயிரின்
புல்லன்னர் புல்லறிவின் ஆடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர். (32)

அந்தணரின் நல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை—யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை எண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில். (33)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப—தேரின்
அரிய வரியவற் றாற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும். (34)

மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யில்லாதார்க்குக் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
ஊரிற் பிளிற்றி விடும். (35)

மையினால் அழகுபெற்று விளங்கும் கண்கள்; நெய்யி னால் சுடர்விட்டு எரியும் விளக்குகள்; மேகம் முழங்குவ தால் தளிர்க்கும் குருக்கத்தி; மேலோர் வழங்குவதால் பெருகும் நற்பொருள்கள். (36)

நகைச்சுவைப் பேச்சு நண்பர்களுக்கு மகிழ்ச்சி தரும்; செல்வத்தை வழங்குவது ஏழைகளுக்கு மகிழ்ச்சி தரும்; மனைவியின் வழிபாடு கணவனுக்கு மகிழ்ச்சி தரும்; இசை யின் நுணுக்கம் அறிஞர்களுக்கு மகிழ்ச்சி தரும். (37)

இரப்பவரைக் கண்டு முகம் கவிழ்தல் கரப்பவரது தொழில்; ஈகைக் குணமுடைய செல்வரைச் சேர்தல் இரப் பவரது தொழில்; பரபரப்புள்ள சேனையைச் சேர்தல் வீர ரது தொழில்; ஊன் உண்பதை வெறுப்பது இரக்கமுள்ள வர் தொழில். (38)

கண்ணாற் கண்டவைகளைச் செய்து காட்டுவர் கம்மா ளர்; காதாற் கேட்டவைகளைச் செய்து காட்டுவர் தொழி லறிஞர்; எல்லோருக்கும் நல்லதைச் செய்து முடிப்பவர் சான்றோர்; எண்ணியவற்றைச் செய்து முடிப்பவர் சின மற்றோர். (39)

ஒழுக்கம் தவறிய மக்களிடத்துச் செல்வம் தங்காது; உயிர் கொண்டு செல்லும் கூற்று உளறுவதைக் கேளாது; எதை மறைத்தாலும் காமத்தை மறைக்க இயலாது; எவர் முயன்றாலும் ஒரு நல்ல நாடு அழியாது. (40)

மையாற் றளிர்க்கும் மலர்க்கண்-மாவிருள்
நெய்யாற் றளிர்க்கும் நிமிர்சுடர்-பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல். (36)

நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின்—வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாடல் உணர்வா ரகத்து. (37)

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார் ஒன்றீவார்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை ஊனுண்டல்
செய்யாமை செல்சார் உயிர்க்கு. (38)

கண்டதே செய்பவாங் கம்மியர் உண்டெனக்
கேட்டதே செய்ப புலனாள்வார்—வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு. (39)

திருவுந் திணைவகையால் நில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுவ செய்துண்ணா தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையும்
இறைவகையால் நின்று விடும். (40)

உயிர்கள் பிறக்கும்பொழுது ஒழியென்றால் ஒழியா; அவை இறக்கும் பொழுது இரு என்றால் இரா; செல்வம் சேரும் பொழுது யாவும் பெருகும்; அது பிரியும்பொழுது உள்ளதும் அழியும். (41)

வீரர்களின் சிறப்பு போர் அற்றால் கெடும்; மரங்களின் சிறப்பு வேர் அற்றால் கெடும்; மலரின் சிறப்பு நீர் அற்றால் கெடும்; மன்னரின் சிறப்பு படை அற்றால் கெடும். (42)

அயலார் எனப்படுபவர் நல்லியல்பு அற்றவர்; நண்பர் எனப்படுபவர் நல்லியல்பு உள்ளவர்; தந்தை எனப்படுபவர் தன்னுடைய ஆசிரியர்; தாய் எனப்படுபவர் தான் பெற்ற பெரும்பேறு. (43)

நாணமற்றபோது அறிவு அற்றுப் போகும்; புலன் அடங்கியபோது தீமை அற்றுப் போகும்; நீரற்ற போது பயிர் அற்றுப் போகும்; நலமற்றபோது நட்பு அற்றுப் போகும். (44)

செய்நன்றி சாவது நன்றியறியார் இடத்தில்; விருந்து வருந்திச் சாவது அன்பில்லார் இடத்தில்; இசை அழிந்து சாவது அறிவில்லார் இடத்தில்; ஊடல் அழிந்து சாவது புலவியறியார் இடத்தில். (45)

பிறக்குங்காற் பேரெனவும் பேரா இறக்குங்கால்
நில்லெனவும் நில்லா உயிரெனைத்தும்—நல்லாள்
உடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணா கெடும். (41)

போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடும் மரமெல்லாம்—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும். (42)

ஏதிலா ரென்பர் இயல்பில்லார் யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகையுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் தன்னுவாத்தி தாயென்பாள்
முந்துதான் செய்த வினை. (43)

பொறிகெடும் நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடும் நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினார் நண்பு கெடும். (44)

நன்றிசாம் நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விரும்பிலார் முற்சாம்—அரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்னர் ஊடல்சாம்
ஊட லுணரா ரகத்து. (45)

மலர் இருப்பதை அதன் மணம் கூறும்; செயல் திறனை அவன் சொல் கூறும்; வஞ்சக எண்ணத்தை அவன் மனம் கூறும்; நெஞ்சகத்துள்ளதை அவன் முகம் கூறும். (46)

மக்களுக்கு மழையின்றி நலம் இல்லை; மழையானது நன்னெறியாளர் இல்லாது இல்லை; நன்னெறியும் அரசன் இல்லாது இல்லை; அரசனும் குடிகள் இல்லாது இல்லை. (47)

மாலையின் அழகு மலர்களைப் பொறுத்தது; வண்டுகளின் நலம் தேனைப் பொறுத்தது; தேனின் சிறப்பு பூக்களைப் பொறுத்தது; மக்களின் உயர்வு ஒழுக்கத்தைப் பொறுத்தது. (48)

நண்பர்கள் பிழை செய்தாலும் அறிஞர்கள் வெறுப்பதில்லை; நற்குடியினர் துன்பம் வந்தாலும் உறவினரை வெறுப்பதில்லை; சிறியோர்கள் செல்வம் பெற்றாலும் எவர்க்கும் வழங்குவதில்லை; பெரியோர்கள் வறுமை வந்தாலும் வழங்காது இருப்பதில்லை. (49)

நல்ல உணவும் பிணியுள்ள உடலுக்குக் கேடு செய்யும்; நல்ல சொற்களும் அறிவற்ற மக்களைத் துன்புறுத்தும்; நல்ல மக்களும் அறிவற்ற செயல்களால் வருந்துவர்; நல்ல அரசும் அளவற்ற சேனையால் பாழ்படும். (50)

நாற்ற முரைக்கும் மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கும் முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில். (46)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலார் இல்வழி யில்லை தவமும்
அரசன் இலாவழி யில்லை அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். (47)

பூவினா னந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினா னந்துஞ் சுரும்பெல்லாம்—தீதில்
வினையினா னந்துவர் மக்களுந் தத்தம்
நனையினா னந்தும் நறா. (48)

சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூண் இரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது. (49)

இரைசுடும் இன்புறா யாக்கையுட் பட்டால்
உரைசுடும் ஒண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைத்த சேனை சுடும். (50)

வெறுப்பதற்கு உரியது பிறரை இகழும் செயல்; விரும்புதற்கு உரியது நண்பரின் உறுதிச் சொல்; சேர்வதற்கு உரியது நல்லோரின் அறநெறி; தேர்வதற்கு உரியது நூல்களில் மெய்ப்பொருள். (51)

ஆற்று வெள்ளத்தை உள் அடக்கும் குளங்களும் உள்ளன; அரசர் விரும்பி ஏற்கும் குடிமக்களும் உள்ளனர்; வேதத்தினுஞ் சிறந்த பாடல்களும் உள்ளன; வேள்வியிலும் உயர்ந்த வேளாண்மையும் உள்ளன. (52)

வேளாளன் என்பவன் வித்தும் ஏரும் உடையவன்; பார்ப்பனன் என்பவன் ஏலாதான் எனினும் சாதிப்பவன்; துணைவி என்பவள் அறிவும் அழகும் உடையவள்; தலைவன் என்பவன் தன் சேனையுடன் வாழ்வன். (53)

யானையை உடையவர் அதன் சினங்கண்டு மகிழ்வர்; குதிரையின் விரைந்த ஓட்டத்தைக் கண்டு மன்னர்கள் மகிழ்வர்; மங்கையரின் நாணத்தைக் கண்டு நன்மக்கள் மகிழ்வர்; தீயதையும் தீமையையும் கண்டு தீயோர் மகிழ்வர். (54)

கண்களைவிடச் சிறந்த உறுப்புக்கள் வேறு எதுவுமில்லை; கணவனைவிட உறவினர்கள் மகளிர்க்கு வேறு எவருமில்லை; மக்களைவிட உயர்ந்த பொருள் பெற்றோர்க்கு வேறு எதுவுமில்லை; ஈன்ற தாய்க்கு ஒப்பாக இவ்வுலகில் எதுவுமேயில்லை. (55)

எள்ளற் பொருளது இகழ்தல் ஒருவனை
உள்ளற் பொருளது உறுதிச்சொல்—உள்ளறிந்து
சேர்தற் பொருளது அறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள். (51)

யாறுள் ளடங்கும் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள—தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. (52)

எருதுடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்
ஒரு தொடையான் வெல்வது கோழி—உருவொடு
அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்ணென்ப சேனை
செறிவுடையான் சேனாபதி. (53)

யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர்—கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாணுவப்பர் அல்லாரை
அல்லார் உவப்பது கேடு. (54)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை—மக்களின்
ஒண்மைவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளோடு
எண்ணக் கடவுளு மில். (55)

கற்றவரோடு விரும்பி வாழ்பவர் கற்றவரேயாவர்; இரக்கமற்ற மனத்தினர் இடர் செய்பவரேயாவர்; உண்மையை மறைத்துக் கூறுபவர் பகைவரேயாவர்; கீழ் மக்கள் பாம்பு வாழ்கின்ற புற்றேயாவர். (56)

சிறந்த செயல்களைச் செய்பவர் உயர்ந்த அறிஞர்கள்; தீய செயல்களைச் செய்பவர் தாழ்ந்த அறிவினர்; அறச் செயல்களைச் செய்பவர் நற்குடிப் பிறந்தோர்; பேராசை யைத் துறந்தோர் பெருநலம் பெறுவோர். (57)

ஞாயிறும் விண்மீனும் என்றென்றும் உள்ளன; நலமும் பிணியும் என்றென்றும் உள்ளன; ஈவாரும் ஏற் பாரும் என்றென்றும் உள்ளனர்; இறப்பாரும் பிறப்பாரும் என்றென்றும் உள்ளனர். (58)

உயிர் கொல்லாது உண்பவன் நல்லுணவு உண்பவன்; முகம் கோணி வாழ்பவன் வெறுக்கப்படுபவன்; நன்மை செய்யாது வாழ்பவன் நண்பர்களை இழந்தவன்; ஒழுக்கம் தவறாது வாழ்பவன் உலகோர்க்கு இனியவன். (59)

பிறருக்குக் கொடுத்து உண்பது புகழுக்கு இடம் தரும்; பொருளைப் பறித்து உண்பது பழிக்கு இடம் தரும்; விரும்பாதார் முன் செல்வது இகழ்ச்சிக்கு இடம் தரும்; தகுதி அறியாரிடம் இரப்பது அழிவுக்கு இடம் தரும். (60)

கற்றன்னார் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னார் செற்றாரைச் சேர்ந்தவர்—
தெற்றென்ன
உற்ற துரையாதார் உள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார். (56)

மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பார் அறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர். (57)

என்று முளவாகு நாளும் இருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாருஞ்
சாவாரும் என்று முளர். (58)

இனிதுண்பான் என்பான் உயிர்கொல்லா துண்பான்
முனிதக்கான் என்பான் முகனொழிந்து வாழ்வான்
தனியன் எனப்படுவான் செய்தநன் றில்லான்
இனியன் எனப்படுமான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன். (59)

ஈத்துண்பான் என்பான் இசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான்—தெற்ற
நகையாகு நண்ணார்முற் சேரல் பகையாகும்
பாடறியா தானை இரவு. (60)

நெய்யைச் சொரியச்சொரிய நெருப்பு வளரும்; வாழ்த்தி வணங்க வணங்கப் பெரியோர் மகிழ்வர்; கன்று ஊட்ட ஊட்டப் பால் சுரக்கும்; விரும்பிப் போற்றப் போற்ற விருந்தினர் பெருகுவர். (61)

நல்ல குடிப்பெருமையை நன்மக்களாற் காணலாம்; நண்பனது உள்ளத்தைக் கெட்டபோது அறியலாம்; சிறப்புடைய வாழ்வைச் செல்வப் பெருக்கால் அறியலாம்; பண்புடைய அறிஞரைப் பகைவன் போற்றக் காணலாம். (62)

அழகற்ற கண்களிலும் விரும்பும் கண்கள் உள்ளன; அழகற்ற பெண்களிலும் போற்றும் பெண்கள் உள்ளனர்; அடிமைப்பட்ட நாட்டினும் சிறந்த ஊர்கள் உள்ளன; சிறப்பற்ற பாட்டிலும் சில கருத்துகள் உள்ளன. (63)

திரியில் உள்ள நெருப்பைக் கண்டு தொழுது எழுவர்; விறகில் உள்ள நெருப்பைக் கண்டு வெறுத்து ஒதுக்குவர்; படிக்காத மூத்தவனை மதியாது விடுவார்கள்; படித்துள்ள இளையவனைப் பாராட்டி மகிழ்வார்கள். (64)

பொருள் இருந்தால்தான் விரும்பியது கிடைக்கும்; நீர் இருந்தால்தான் விதைகள் முளைக்கும்; முயற்சி இருந்தால் தான் செல்வம் பெருகும்; சோம்பல் இருந்தால்தான் அழிவு நெருங்கும். (65)

நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்பழல், சேர்ந்து
வழுத்தவரங் கொடுப்பர் நாகர்—தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து. (61)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக—பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியாற்
போற்றாதார் போற்றப் படும். (62)

கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றாம் பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவாம்—ஒருவழி
நாட்டுள்ளுங் நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட லுள. (63)

திரியழற் காணிற் றொழுப விறகின்
எறியழற் காணின் இகழ்ப—ஒரு குடியின்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டு முலகு. (64)

கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டேல் உண்டாம்—திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும் மற்றவள்
துன்புறுவா ளாகிற் கெடும். (65)

இறைச்சியை உண்டு இன்புறும் புலி; புல்லை உண்டு இன்புறும் பசு; சோற்றை உண்டு மகிழ்வர் கீழோர்; அறிவை உண்டு மகிழ்வர் அறிஞர். (66)

தொடங்கியபின் துன்பத்தினை அடைவர் ஆராய்ச்சி யற்றோர்; தொடங்குமுன் எண்ணிச் செய்வர் ஆராய்ச்சி யாளர்; விரும்பியவற்றை அடைந்து மகிழ்பவர் பற்று மிகுந்தோர்; வீணாகாதவற்றைச் செய்து மகிழ்வர் பற்று அற்றோர். (67)

இருந்தும் பயனடையாதவரைவிட இல்லாதவர் நல்லவர்; வைத்து இழப்பவரைவிட வறுமையாளர் நல்லவர்; சினந்து வைபவரைவிடப் பொறுப்பவர் நல்லவர்; நன்மை செய்பவரை விட நன்றியை மறவாதவர் நல்லவர். (68)

தந்தையின் தன்மையை மகனால் அறியலாம்; நெஞ்சத்து உள்ளதை முகத்தால் அறியலாம்; உழைப்பின் சிறப்பை விளைவால் அறியலாம்; நிலத்தின் இயல்பை மழையால் அறியலாம். (69)

ஊர் நல்லது ஒற்றுமை கொண்டிருந்தால்; அறிவு நல்லது குற்றமறக் கற்றிருந்தால்; ஆனிரை நல்லது காளைகள் சிறந்திருந்தால்; வாழ்வு நல்லது வழங்கி உண்டு வந்தால். (70)

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉம் நீர்நிலத்துப்
புல்லினான் இன்புறூஉங் காலேயம்—நெல்லின்
அரிசியான் இன்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையான் இன்புறூஉ மேல். (66)

பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை என்பெறினும்
முன்னவா முன்னம் அறிந்தார்கட்கு—என்றும்
அவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவாம்
அவாவிலார் செய்யும் வினை. (67)

கைத்தில்லார் நல்லர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரின் நல்லர் வறியர்—பைத்தெழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர். (68)

மகனுரைக்குந் தந்தை நலத்தை ஒருவன்
முகனுரைக்கும் உண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
புலத்தியல்பு புக்கானுரைக்கும் நிலத்தியல்பு
வான முரைத்து விடும். (69)

பதிநன்று பல்லா ருறையின் ஒருவன்
மதிநன்று மாசறக் கற்பி—னுதிமருப்பின்
ஏற்றான்வீ றெய்தும் இனநிரை தான்கொடுக்குஞ்
சோற்றான்வீ றெய்துங் குடி. (70)

குதிரையின் சிறப்பு கொண்டவனைப் பொறுத்தது; அறத்தின் சிறப்பு ஆற்றலைப் பொறுத்தது; குளத்தின் சிறப்பு வாய்க்காலைப் பொறுத்தது; வாழ்க்கையின் சிறப்பு வருவாயைப் பொறுத்தது. (71)

ஊழிகள் ஆண்டு ஆண்டாய்க் கழிந்தன; நாட்கள் நாழிகை நாழிகையாய்க் கழிந்தன; நல்லோர் தொண்டு செய்தே மறைந்தனர்; அறிவிலார் வைது வைதே அழிந்தனர். (72)

கற்றறிந்தோர் தளர்ந்தால் எப்படியும் நிமிர்வர்; கல்லாதவர் தளர்ந்தால் கெட்டே அழிவர்; நல்ல செயல்களே வாழ்வுக்கு ஏற்றது; நல்லறிவு ஒன்றே வாழ்க்கைக்கு வித்து. (73)

புலவர் பெருமக்களே மக்களில் உயர்ந்தவர்; புலவரோடு வாழ்பவர் அவரது உறவினர்; புலவரைப் போற்றுபவர் அவர் அருள் பெற்றவர்; அவரிடம் அன்பு கொண்டோர் அவரையே ஒத்தவர். (74)

பொய் சொல்லும்பொழுதே நட்பை விட்டுவிடு; மருத்துவன் கேட்கும்பொழுதே பிணியைச் சொல்லிவிடு, பெரியோர் கூறும்பொழுதே தவறை விட்டுவிடு; உரியவன் கேட்கும் பொழுதே பொருளைக் கொடுத்துவிடு. (75)

ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய அறஞ்செயல்—தொட்ட
குளத்தனைய தூம்பின் அகலங்கள் தத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு. (71)

ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமும்
நாழிகை யானே நடந்தன—தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர்
வெட்கென்றார்
வெஞ்சொலா லின்புறு வார். (72)

கற்றான் றளரின் எழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முறியும்—எல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும். (73)

தேவரனையர் புலவருந் தேவர்
தமரனையர் ஓரூர் உறைவார்—தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றா றாரைக் காத லவர். (74)

தூர்ந்தொழியும் பொய் பிறந்தபோழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கும்—நல்லாக
விடுகென்ற போழ்தே விடுக வுரியான்
தருகெனிற் றாயம் வகுத்து. (75)

இன்சுவையை நாக்கு சுவைத்து அறியும்; நன்மணத்தை மூக்கு மோந்து அறியும்; அணி அழகைக் கண்கள் கண்டு அறியும்; கருத்துகளை அறிஞர் எண்ணியே அறிவர். (76)

இறவாது இருந்த உயிரும் இல்லை; கெடாது இருந்த வலிமையும் இல்லை; மூவாது இருந்த இளமையும் இல்லை; குறையாது இருந்த செல்வமும் இல்லை. (77)

மக்களின் தன்மையைச் சொல்லால் அறியலாம்; ஆற்றின் பள்ளத்தை குளிர்நீரால் அறியலாம்; நல்ல நெறியை நடுநிலைமையால் அறியலாம்; கள்ளின் வெறியை தடுமாற்றத்தால் அறியலாம். (78)

நாவைக் காப்பாற்றாமல் பேசினால் நட்புக் கெடும்; நல்ல செயல்களும் கட்டாயப்படுத்தினால் கெடும்; நல்ல நூல்களைப் பயின்றால் ஆசை கெடும்; பகையைப் பெருக்கிக்கொள்வதால் வாழ்வு கெடும். (79)

கொடுக்க விரும்பினால் இல்லாதவர்க்கு உணவு கொடு; ஒன்றை விடுக்க விரும்பினால் ஆசையை விடு; எடுக்க விரும்பினால் சுற்றத்தாருள் ஏழையை எடு; எதையேனும் கெடுக்க விரும்பினால் சினத்தைக் கெடுத்துவிடு. (80)

நாக்கின் அறிப இனியதை மூக்கினான்
மோந்தறிப எல்லா மலர்களும்—நோக்குள்ளுங்
கண்ணினாற் காண்ப அணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினால் எண்ணப் படும். (76)

சாவாத தில்லை பிறந்த உயிரெல்லாந்
தாவாத தில்லை வலிகளும்—மூவா
திளமை யிசைத்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில். (77)

சொல்லா னறிப ஒருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை—யார்கண்ணும்
ஒப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா. (78)

நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கப் பிணிப்பின் அவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிபு. (79)

கொடுப்பின் அசனம் கொடுக்க விடுப்பின்
உயிரிடை யீட்டை விடுக்க—வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல். (80)

வறுமையினால் அழகும் இளமையும் குன்றும்; கல்லாமையால் குடியும் பெருமையும் குன்றும்; நீர் இல்லாமையால் பயிரும் பலனும் குன்றும்; அதிகச் சுமையினால் ஆளும் எருதும் குன்றும். (81)

கற்ற அறிஞர்க்கும் தம் ஊர் என்று ஓர் ஊர் இல்லை; கைப்பொருள் உள்ளவர்க்கும் தம் ஊர் என்று ஓர் ஊர் இல்லை; ஒழுக்கம் உள்ளவர்க்கும் தம் ஊர் என்று ஓர் ஊர் இல்லை; ஒழுக்கம் கெட்டவர்க்கும் தம் ஊர் என்று ஓர் ஊர் இல்லை. (82)

கல்வி இல்லாதவர்க்கு அவர்களின வாய்ச் சொல்லே எமன்; செழித்த வாழைக்கு அது ஈன்ற காய்களே எமன்; தீமை செய்பவர்க்கு அவர்தம் செய்கையே எமன்; உயர்ந்த வாழ்வுக்கும் ஒழுக்கம் தவறுபவரே எமன். (83)

நீர் வளத்தால் சிறப்படையும் விளைநிலம்; கடல் வளத்தால் சிறப்படையும் பட்டினம்; நாட்டு வளத்தால் சிறப்படைவர் மன்னர்; கலை வளத்தால் சிறப்படையும் கூத்து. (84)

கணவனோடு ஒற்றுமைப்பட்டு வாழ்தல் பெண்களுக்கு நல்லது; அறத்தோடு ஒன்றுபட்டு வாழ்தல் அறிஞர்க்கு நல்லது; தீய ஆட்சியை மாற்றி ஆளுதல் மன்னர்க்கு நல்லது; சுற்றத்தாரைக் கைவிடாது இருப்பது வாழ்வுக்கு நல்லது. (85)

நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்
குலனும் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு. (81)

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர். (82)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறம்கூற்றம் கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள். (83)

நீரான்வீ றெய்தும் விளைநிலம் நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினம்—கொண்டாளும்
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும். (84)

ஒன்றாக்கல் பெண்டிர் தொழினலம் என்றும்
நன்றாக்கல் அந்தணர் உள்ளம்—பிறனாளும்
நாடுக்கல் மன்னர் தொழினலம் கேடுக்கல்
கேளிர் ஒரீஇ விடல். (85)

திருடாமை வேண்டும் பிறர்க்குரிய பொருள்களை; தள்ளாமை வேண்டும் தகுதியுடைய செயல்களை; சேராமை வேண்டும் சிற்றின மக்களை; பகையாமை வேண்டும் எப்போதும் எவரையும். (86)

நெருங்கி வாழும் மக்களை நன்மை செய்து உயர்த்து; ஒட்டாத மக்களைக் காலமறிந்து விலக்கு; எவரிடமும் சென்று உண்பதைக் குறை; ஏழைகளிடத்துக் காட்டும் கோபத்தை விடு. (87)

கெட்டுப் போகிற மக்கள் சோம்பலில் இருப்பர்; விரும் பாததைச் செய்பவர் கொடுமையில் இருப்பர்; நாணமுள்ள பெண்கள் நல்லியல்பில் இருப்பர்; வலிமையுள்ள யானை கட்டுமிடத்தில் இருக்கும். (88)

அருளுடைய பெரியோர் நல்நெறியை அறிவர்; அறி வுடைய மன்னர் ஆட்சி முறையை அறிவர்; பெருந்தன்மை யுடையோர் வணங்கும் முறை அறிவர்; பண்புடைய பெண்கள் வாழ்க்கை முறை அறிவர். (89)

காவல் இல்லாமல் நல்லவள் கற்பைக் காப்பாற்றி நிற்பாள்; காவல் இருப்பினும் அல்லவள் நெறி தவறி விடு வாள்; இடையூறு சேரினும் காதல் தன்வழியே செல்லும்; முயன்று மறைத்தாலும் கொலை செய்தவனைக் காட்டி விடும். (90)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. (86)

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்கு
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம். (87)

மடிமை கெடுவார்கள் நிற்கும் கொடுமைதான்
பேணாமை செய்வார்கண் நிற்குமாம்—பேணிய
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்கண் நிற்குங் களிறு. (88)

மறையறிப அந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப அரசர்கள்—என்றும்
வணங்கல் அணிகலஞ் சான்றோர்க் கஃதன்றி
அணங்கல் வணங்கின்று பெண். (89)

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங் கொழுகும் பிணையிலி—முட்டினுஞ்
சென்றாங்கே சென்றொழுகுங் காமம் கரப்பினும்
கொள்ளுன்மேல் நிற்குங் கொலை. (90)

அஞ்சாமை பெருகினால் வலிமை பெருகும்; அன்பு பெருகினால் சுற்றத்தார் பெருகுவார்; அருட்குணம் பெருகினால் அறச்செயல் பெருகும்; கொடுமைக்குணம் பெருகினால் தீச் செயல் பெருகும். (91)

இளமையிற் கல்லாத செயல் எப்போதும் தீமை தரும்; வருவாய் இல்லாதபோது ஈகைச் செயல் தீமை தரும்; சுற்றத்தார் இல்லாதபோது சினமடைதல் தீமை தரும்; அன்பில்லார் இல்லத்தில் உண்ணுதல் தீமை தரும். (92)

கொலையைச் செய்ய எண்ணுவது கொடியவர்க்கும் தீது; பிள்ளைகளைப் படிப்பியாமல் வளர்ப்பது பெற்றோர்க்கும் தீது; நாணமின்றி முன்வந்து நிற்பது நல்ல பெண்ணுக்கும் தீது; கொள்கையின்றி நடப்பது குடிப் பெருமைக்கும் தீது. (93)

நல்லொழுக்கம் என்பது கல்வியறிவால் உண்டாவது; அறமும் இன்பமும் பொருட்செல்வத்தால் உண்டாவது; நேர்மை என்பது நடுநிலைமையால் உண்டாவது; நல்ல முடிவு என்பது தானும் ஆராய்வதால் உண்டாவது. (94)

கள் இல்லாமையால் வருந் துன்பத்தைக் குடியர் அறிவர்; நீர் இல்லாமையால் வருந்துன்பத்தைப் பறவைகள் அறியும்; வறுமைத் துன்பத்தை இருமனைவியரைப் பெற்றவர் அறிவார்; மறைப்பதனால் வருந்துன்பத்தைத் திருடர் அறிவர். (95)

வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகின் இனம்பெருகும் சீர்சான்ற
மென்கண் பெருகின் அறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது. (91)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மைகுற்றம்
கிளைஞரில் போழ்திற் சினம்குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத் தூண். (92)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடல்தீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை. (93)

ஆசார மென்பது கல்வி அறஞ்சேர்ந்த
போகம் உடைமை பொருளாட்சி—யார்கண்ணுங்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணோட்ட மின்மையு மில். (94)

கள்ளின் இடும்பை களியறியும் நீரிடும்பை
புள்ளினுள் ஓங்கல் அறியும்—நிரப்பிடும்பை
பல்பெண்டி ராளன் அறியும் கரப்பிடும்பை
கள்வன் அறிந்து விடும். (95)

கடுஞ்சொல் அன்புடையர் வாயினிற் தோன்றாது; வஞ்சனைச் சொல் கற்றறிந்தார் வாயினிற் தோன்றாது; தீய சொற்கள் சான்றோர் வாயினிற் தோன்றாது; கீழ் மக்கள் வாயினில் யாவும் தோன்றிவிடும். (96)

அழகிய மகளிர்முன் அழகில்லான் சிறப்புடையான்; கற்றார் அவையில் கல்வியற்றார் சிறப்படையார்; கல்லா தார் கூட்டத்தில் கற்றவர்கள் சிறப்படையார்; அறிவில்லார் இடைப்பட்டால் அறிஞரும் சிறப்படையார். (97)

மாசுபட்டாலும் வைரம் ஒளி குன்றாது; சுழுவி எடுத் தாலும் இரும்பு ஒளி வீசாது; தண்டித்து வைத்தாலும் கீழ்மக்கள் திருந்தார்கள்; நல்லுரை கூறினும் கீழ்மக்கள் கேளார்கள். (98)

சான்றோரைவிட்டு நீங்காது வாழ்தல் அறிவுடைமை யைக் காட்டும்; இரக்கமில்லாருடன் சேர்ந்து வாழ்தல் இமையடைவதைக் காட்டும்: நண்பர்களது சொல் கடுமையா யிருப்பினும் நல்வழியைக் காட்டும்; பண்புடைய மனைவி இல்லாத வீடு பாழ்படுவதைக் காட்டும். (99)

குளம் சிறிதானால் நீர் கொள்ளாது வழியும்; வருமானம் சிறிதானால் மனைவி மிகுந்து பேசுவாள்; செயல் சிறிதானால் பயனும் குறைந்துவிடும்; வலிமை சிறி தானால் பகைவரும் பெருகுவர். (100)

வடுச்சொல் நயமில்லார் வாய்த்தோன்றும் கற்றார்
வாய்ச்
சாயினுந் தோன்றா காப்புச்சொல்—தீய
பரப்புச்சொல் சான்றோர்வாய்த் தோன்றா கரபுச்
சொல், கிழ்கள்வாய்த் தோன்றி விடும். (96)

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலும் அவைப்படின் கல்லாதான் பாடிலன்
கற்றான் ஒருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின். (97)

மாசு படினும் மணிதன்சீர் குன்றாதாம்
பூசுக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்
பாசத்துள் இட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். (98)

எண்ணொக்குஞ் சான்றோர் மரீஇயாரிற் றீராமை
புண்ணொக்கும் போற்றா ருடனுறைவு—பண்ணிய
யாழொக்கும் நாட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையாள் இல்லா மனை. (99)

ஏரி சிறிதாயின் நீரூரும் இல்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரும்—மேலைத்
தவஞ் சிறிதாயின் வினையூரும் ஊரும்
உரன் சிறிதாயின் பகை. (100)

வைது வருவதால் இழிவு பெருகும்; வணங்கி வாழ்வதால் நல்லறிஞர் பெருகுவர்; பொருளைப் போற்றுவதால் இன்பம் பெருகும்; இரக்கம் காட்டுவதால் அறச் செயல் பெருகும். (101)

எல்லாம் அறிந்தவன் என்று இவ்வுலகில் எவனுமில்லை; ஏதும் அறியாதவன் என்று இவ்வுலகில் எவனுமில்லை; குற்றமே செய்பவன் என்று இவ்வுலகில் எவனுமில்லை; குறையே இல்லாதவன் என்று இவ்வுலகில் எவனுமில்லை. (102)

மனைக்கு ஒளிவீசும் விளக்கு மனைவி; பெற்றோர்க்கு ஒளி வீசும் விளக்கு மக்கள்; மக்களுக்கு ஒளிவீசும் விளக்கு கல்வி; கல்விக்கு ஒளிவீசும் விளக்கு ஒழுக்கம். (103)

இன்சொல் வழங்குவதால் நட்புறவு உண்டாகும்; வன்சொல் வழங்குவதால் வசை பகை உண்டாகும்; மென் சொல் வழங்குவதால் அருள்மனம் உண்டாகும்; அருள் மனம் பெறுவதால் அழியாவாழ்வு உண்டாகும். (104)

**நான்மணிகள் முற்றிற்று**

வைததனால் ஆகும் வசையே வணக்கமது
செய்ததனால் ஆகும் செழுங்கிளை—செய்த
பொருளினால் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம். (101)

ஒருவன் அறிவானும் எல்லாம் யாதொன்றும்
ஒருவன் அறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமுள் ளானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானும் இல். (102)

மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சால் உணர்வு. (103)

இன்சொலான் ஆகும் கிழமை இனிப்பிலா
வன்சொலான் ஆகும் வசைமனம்—மென்சொலின்
நாவினான் ஆகும் அருண்மனம் அம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும். (104)

**நான்மணிக்கடிகை முற்றிற்று.**

முத்தமிழ்க் காவலர்

## கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

தமிழ்ச் செல்வம் ... ...
தமிழின் சிறப்பு ... ...
அறிவுக் கதைகள் தொண்ணூறு ... ...
எனது நண்பர்கள் ... ...
வள்ளுவரும் குறளும் ... ...
வள்ளுவர் உள்ளம் ... ...
திருக்குறள் கட்டுரைகள் ... ...
திருக்குறளில் செயல்திறன் ... ...
திருக்குறள் புதைபொருள் (முதற் பகுதி)
திருக்குறள் புதைபொருள் (இரண்டாம் பகுதி)
மும்மணிகள் ... ...
நான்மணிகள் ... ...
ஐந்து செல்வங்கள் ... ...
ஆறு செல்வங்கள் ... ...
அறிவுக்கு உணவு ... ...
தமிழ் மருந்துகள் ... ...
மணமக்களுக்கு ... ...
இளங்கோவும் சிலம்பும் ... ...
நல்வாழ்வுக்கு வழி ... ...
எண்ணக்குவியல் ... ...
வள்ளலாரும் அருட்பாவும் ... ...
வானொலியிலே (அச்சில்) ...
மாணவர்களுக்கு ... ...
திருச்சி விசுவநாதம் வரலாறு ... ...
(மா. சு. சம்பந்தம்)

## பாரி நிலையம்

*184, பிராட்வே, சென்னை-600 108*

Wrapper Printed by
Eskay Art Printers, Madras-5. Ph. 844727